FIRST INFORMATION REPORT

Under Section 173 BNSS

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129869

1. District : திருவாரூர் PS: V & AC Year: 2026 FIR No.: 2/26 Date: 19.6.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7, 7(a) r/w 12

(iii) Act சட்டம்: as amended 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.06.2026 Date to : 18.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 12.00 Hrs Time to : 21.00 Hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Comp FIR Time : 19.06.2026 - 12.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் 19.06.2026 - 12.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தனிநபர் மூலம் தகவல் பெறப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 1 km வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : பட்டாவு கோவிலிருந்து பிள்ளையார்
முறைக் காவல் எண் முகவரி கோவில் திருவாரூர்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : [illegible] (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : துணை மேலாளர், தேர்தல் பிரிவு
தொழில் முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவாரூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

எதிரிகளின் பட்டியல் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : 2
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது:

இன்று 19.06.2026-ந் தேதி 12.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திரு.D.அனிதா ஆரோக்கியமேரி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.K.அசோகன், துணை வட்டாட்சியர் (தேர்தல் பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :-அனுப்புநர் திரு.K.அசோகன், த/பெ கலியபெருமாள், துணை வட்டாட்சியர் (தேர்தல் பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர் பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, 18.06.2026-ஆம் தேதி திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்கள் மூலமாக கையூட்டு பெறப்பட்டு வட்டார போக்குவரத்து

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொளளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

19/6/26
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. Anitha Arokiyamary
Rank: நிலை Inspector of Police No. எண் .....
VBAC, Thiruvarur.

அலுவலகத்திற்கு அருகில் உள்ள கணினி மற்றும் புகை சான்று வழங்கும் கடைகளில் கொடுக்கப்பட்டு வாரம் ஒருமுறை ஏதேனும் ஒருநாளில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொடுக்காமல் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு கிளம்பும் போது வெளியில் வைத்து திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் கையூட்டு பெறுவதாகவும் மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களும் கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தஞ்சாவூர் ஆய்வு குழு அலுவலர் திரு.பார்த்தசாரதி அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில் நானும், திரு.K.பால்ராஜ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி ஆணையர் அலுவலகம் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவாரூர் மற்றும் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் 12.00 மணிமுதல் 21.00 மணிவரை திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த தனி நபர்களான திரு. கஜேந்திரனிடமிருந்து ரூ.2,220/- திரு.சிவாஜியிடமிருந்து ரூ.570/-ம் திரு.முகமது தவ்பிகிடமிருந்து ரூ.50,000/- ம் திரு.முகம்மது தாவூதிடமிருந்து ரூ.9500/- ம் திரு. சுப்பிரமணியன் என்பவரின் சாந்தி ஆட்டோ கன்சல்டன்ட் கடையில் இருந்து ரூ.66,000/-ம் திரு.கஜேந்திரன் என்பவரின் புகை பரிசோதனை கடையில் இருந்து ரூ.72,800/- ஆக கூடுதல் ரூ.2,01,090/- கணக்கில் வராத தொகையானது வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்கள் மூலமாக கையூட்டாக பெறப்பட்ட தொகை என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் ஆஜர் படுத்துகிறேன். எனவே 1. திரு. M.P.காளியப்பன், த/பெ பொன்னுசாமி வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம் திருவாரூர் மற்றும் தனி நபர்களான 2. திரு. கஜேந்திரன் த/பெ அமிர்த கணேசன், முதலியார் தெரு, திருவாரூர், 3. திரு. சுப்பிரமணியன் த/பெ ராமகிருஷ்ணன், அண்ணா நகர், சேந்தமங்கலம், 4. திரு.சிவாஜி , த/பெ ராஜேந்திரன், மேல

கொத்தத்தெரு, மயிலாடுதுறை மெயின்ரோடு, திருவாரூர், 5. திரு.முகமது தவ்பிக் த/பெ நஜிபுதின், தெற்குதெரு, அடியக்கமங்கலம், 6. திரு.முகம்மது தாவூத் த/பெ அப்துல் கபூர், தெற்குதெரு, ஆழியூர், நாகப்பட்டினம் ஆகியோர் மீது வழக்கு பதிவுசெய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd (xxxxx) 19.06.2026, **(K.அசோகன்)** துணை வட்டாட்சியர் (தேர்தல் பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர். Sir, Received the complaint and registered a case in Thiruvarur V&AC Cr.No.02/2026 U/s 106 BNSS and 7, 7(a) r/w 12 of PC Act 1988 as amended 2018 on 19.06.2026 at 14.00 Hrs. Sd (xxxxx) 19/6/26 Inspector of police, V&AC, Thiruvarur District. திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 18.06.2026-ஆம் தேதி திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்கள் மூலமாக கையூட்டு பெறப்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகில் உள்ள கணினி மற்றும் புகை சான்று வழங்கும் கடைகளில் கொடுக்கப்பட்டு வாரம் ஒருமுறை ஏதேனும் ஒருநாளில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொடுக்காமல் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு கிளம்பும் போது வெளியில் வைத்து திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் கையூட்டு பெறுவதாகவும் மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களும் கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தஞ்சாவூர் ஆய்வு குழு அலுவலர் திரு.பார்த்தசாரதி அவர்களின் அறிவுறுத்தியதன் பேரில் திரு.K.அசோகன், த/பெ கலியபெருமாள், துணை வட்டாட்சியர், தேர்தல் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர் ஆகிய நானும், திரு.K.பால்ராஜ், த/பெ கிட்டப்பா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி ஆணையர் அலுவலகம் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவாரூர் என்பவருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவகத்திற்கு சென்றும், மேற்படி தகவலை தெரிவித்தும், அதன் பொருட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 18.06.2026-ஆம் தேதி காலை 11.45 மணியளவில் புறப்பட்டும், 12.00 மணியளவில் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்தும் அலுவலகத்தில் இருந்த நபர்களிடம் திடீர் சோதனை குழுவினரை அறிமுகம் செய்த பின்னர் மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கை விவரம் பின்வருமாறு. **இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1)** திரு.K.அசோகன், கலியபெருமாள், துணை வட்டாட்சியர், தேர்தல் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர். 2) திரு. K.பால்ராஜ், த/பெ கிட்டப்பா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்.3) திருமதி.D.அனிதா ஆரோக்கியமேரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். மேற்படி திடீர் சோதனையின் போது **திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்கள் விவரம். 1)** திரு.M.P.காளியப்பன், த/பெ பொன்னுசாமி, பழைய பேருந்து நிலையம் ரோடு, பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.2) திருமதி.ஆ.காயத்திரி, க/பெ பன்னீர்செல்வம், அக்கரைப்பட்டி, பொரசல்பட்டி, நாமக்கல் மாவட்டம். 3) செல்வி.சே.வித்தியா, த/பெ சேகர், மேலத்தெரு, கீழவேலி, இருமுலை, தஞ்சாவூர் மாவட்டம். 4) திருமதி.இ.ராஜசுவாதிகா, க/பெ முருகதாஸ், எண்.21 ராஜ்நகர், பள்ளியக்ரகாரம், பைபாஸ், தஞ்சாவூர். 5) திருமதி.ரம்ஜான் பேகம், க/பெ அப்துல்பயான், 41 மேலராஜவீதி, நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம், 6) செல்வி.க.ஷாலினி, த/பெ கருணாமூர்த்தி, 2/260 கொசவன் தோட்டம், மாணிக்காபுரம், பல்லடம், திருப்பூர். 7) செல்வி.கோ.சத்யா, த/ப கோவிந்தராஜ், சந்தானபுரம், 4வது தெரு, புதுக்கோட்டை. 8) செல்வி.க.பிரியதர்ஷினி, த/பெ கண்ணப்பன், எண்.12 நகரம், ஆலங்குடி, புதுக்கோட்டை. 9) திருமதி.பிரீதா, த/பெ பாலாஜி, மாரியம்மன் கோயில் தெரு, அரசூர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை. 10) திரு.ஆனந்தபாபுத/பெ கலியமூர்த்தி, 1/11 C-3, சோலையம்பட்டினம், கோடாங்குடி, மயிலாடுதுறை மாவட்டம். (Computer Operator,BONTON Software Pvt.Ltd.) 11) திரு.சிவப்பிரகாசம் த/பெ சுப்பிரமணியன், 96/60 கிழஅலங்கம், தஞ்சாவூர்.(Computer Operator,BONTON Software Pvt.Ltd.) திடீர் சோதனையின்

போது திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த தனிநபர்களின் விபரம் 1) திரு.சிவாஜி 35/2026, த/பெ ராஜேந்திரன், மேலகொத்ததெரு, மயிலாடுதுறை மெயின்ரோடு, திருவாரூர். 2) முகமது தாவிக், 23/2026, த/பெ நஜிபுதின், 6/10558, High School Street, அடியக்கமங்கலம், திருவாரூர். 3) முகம்மது தாவூத் 36/2026, த/பெ அப்துல் கபூர், தெற்கு தெரு, ஆழியூர், நாகப்பட்டினம். 4) திரு.சுப்பிரமணியன் 54/2026, த/பெ ராமகிருஷ்ணன் 379/ A, அண்ணாநகர், சேந்தமங்கலம், திருவாரூர். 5) திரு.கஜேந்திரன் 32/2026, த/பெ அமிர்த கணேசன், 1/103, முதலியார் தெரு, திருவாரூர். திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகமானது வாகனங்கள் நிறுத்தும் இடவசதியுடன் வளாகத்தின் வாசலில் மேற்கு புறத்தில் இரும்பு கேட் போடப்பட்டுள்ளது . அலுவலகமானது வடக்கு பார்த்த வாசலுடன் அமைந்து, அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அலுவலகத்தின் வாசலில் உள்ள போர்ட்டிகோவில் மேற்கு பார்த்தவாறு வட்டார போக்குவரத்து அலுவலரின் நான்கு சக்கர அரசு வாகனம் Bolero TN 50 G 5050 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தில் உள்ளே நுழைந்தவுடன் ஒரு ஹாலும் ஹாலின் மேற்கு பக்கத்தில் வடக்கு நோக்கி ஏறும் வகையில் முதல் தளத்திற்கு செல்லும் மாடிப்படி அமைந்துள்ளது. ஹாலின் தென்மேற்கில் சர்வர் அறையும், அதனுள்ளாக மேற்கே உள்ள வாசல் வழியாக சென்றால் போட்டோ எடுக்கும் அறையும் அந்த அறைக்கு மேற்கு பக்க வாசலும் அமைந்துள்ளது. ஹாலின் தெற்கே வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையும், ஹாலின் கிழக்கே வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்கள் பணிபுரியும் பெரிய ஹாலும், அந்த ஹாலின் முன்புறத்தில் வலது புறத்தில் PA to RTO அறையும், இடது புறத்தில் அலுவலக கண்காணிப்பாளர் அறையும் அமைந்துள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் வட்டார போக்குவரத்து அலுவலர் கிழக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்துள்ளார். அலுவலகத்தின் முதல் தளத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அறையும், ஆவணங்கள் வைப்பறையும் உள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.வீரவேல் பயிற்சிக்காக சென்னை சென்றுள்ளார். கண்காணிப்பாளர் திருமதி.ஒலினா குறித்து கேட்க அரைநாள் விடுப்பில் சென்றுள்ளதாக வட்டார போக்குவரத்து அலுவலர் தெரிவித்தார்.வட்டார

போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த அலுவலர்களை மெயின் ஹாலுக்கு வரவழைத்து அனைவரையும் சோதனை செய்யப்பட்டது. அவர்களிடம் கீழ்கண்டவாறு தொகைகள் காணப்பட்டது.

வ.எண்	அலுவலர்கள் விபரம்	தொகை விபரம்
1.	திரு.M.P.காளியப்பன், த/பெ பொன்னுசாமி, பழைய பேருந்து நிலையம் ரோடு, பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.	320
2.	திருமதி.ஆ.காயத்திரி, க/பெ பன்னீர்செல்வம், அக்கரைப்பட்டி, பொரசல்பட்டி, நாமக்கல் மாவட்டம்.	500
3.	செல்வி.சே.வித்தியா, த/பெ சேகர், மேலத்தெரு, கீழவேலி, இருமுலை, தஞ்சாவூர் மாவட்டம்.	100
4.	திருமதி.இ.ராஜகவாதிகா, க/பெ முருகதாஸ், எண்.21 ராஜ்நகர், பள்ளியக்ரகாரம், பைபாஸ், தஞ்சாவூர்.	710
5.	திருமதி.ரம்ஜான் பேகம், க/பெ அப்துல்பாயான், 41 மேலராஜவீதி, நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம்,	700
6.	செல்வி.க.ஷாலினி, த/பெ கருணாமூர்த்தி, 2/260 கொசவன் தோட்டம், மாணிக்காபுரம், பல்லடம், திருப்பூர்.	250
7.	செல்வி.கோ.சத்யா, த/ப கோவிந்தராஜ், சந்தானபுரம், 4வது தெரு, புதுக்கோட்டை.	350
8.	செல்வி.க.பிரியதர்ஷினி, த/பெ கண்ணப்பன், எண்.12 நகரம், ஆலங்குடி, புதுக்கோட்டை.	100
9.	திருமதி.பிரீதா, த/பெ பாலாஜி, மாரியம்மன் கோயில் தெரு, அரசூர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை.	600
10.	திரு.ஆனந்தபாபு த/பெ கலியமூர்த்தி, 1/11 C-3, சோலையம்பட்டினம், கோடாங்குடி, மயிலாடுதுறை மாவட்டம். (Computer Operator,BONTON Software Pvt.Ltd.)	300
11.	திரு.சிவப்பிரகாசம் த/பெ சுப்பிரமணியன், 96/60 கிழஅலங்கம், தஞ்சாவூர்.(Computer Operator,BONTON Software Pvt.Ltd.)	800

வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களிடம் அவர்களிடமிருந்த தொகை குறித்து விசாரித்து தனிநபர் கையிருப்பு பணப்பதிவேட்டினையும் சரிபார்த்து அவர்கள் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த தனிநபர்களை மெயின் ஹாலுக்கு வரவழைத்து அனைவரையும் சோதனை செய்யப்பட்டது. அவர்களிடம் கீழ்கண்டவாறு தொகைகள் காணப்பட்டது.

வ.எண்	அலுவலர்கள் விபரம்	தொகை விபரம்
1.	திரு.சிவாஜி 35/2026, த/பெ ராஜேந்திரன், மேலகொத்ததெரு, மயிலாடுதுறை மெயின்ரோடு, திருவாரூர்.	570
2.	திரு.முகமது தவ்பிக்23/2026, த/பெ நஜிபுதின்,' 6/10558, High School Street, அடியக்கமங்கலம், திருவாரூர்.	50,000
3.	திரு.முகம்மது தாவூத் 36/2026, த/பெ அப்துல் கபூர், தெற்கு தெரு, ஆழியூர், நாகப்பட்டினம்.	9,500
4.	திரு.கஜேந்திரன் 32/2026, த/பெ அமிர்த கணேசன், 1/103, முதலியார் தெரு, திருவாரூர்.	2,220
	கூடுதல்	62,290

வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த தனிநபரான திரு.சிவாஜியை விசாரிக்க தான் திருவாரூர் மாவட்டம், லெட்சுமாங்குடியில் உள்ள டெல்டா ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் கடந்த 7 வருடமாக வேலை செய்து வருவதாகவும், டெல்டா ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர் முகந்தனூரை சேர்ந்த திரு.ஜார்ஜ் எனவும், மேலும் திருவாரூரில் உள்ள தஞ்சை மாவட்டத்தின் ஸ்ரீராம் பைனான்சில் வேலை செய்து வருவதாகவும், கொரடாச்சேரியை சேர்ந்த மதர்ஷா என்பவரின் Max Cap வாகனத்திற்கு நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் FC Insurance சரியில்லை என அபராத தொகை விதித்திருந்தார் எனவும் அதற்கான அபராத தொகை குறித்து கேட்க வேண்டி இன்று 18.06.2026-ஆம் தேதி திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சுமார் காலை 10.45 மணியளவில் வந்ததாகவும், அலுவலக பணியாளரை சந்தித்து விபரம் கேட்டபோது , ஆடிட் பார்த்து விட்டுதான் சொல்ல வேண்டும் என்றும் காத்திருக்கும்படி சொன்னதால் அலுவலகத்தில் காத்திருந்ததாகவும் கூறினார். அவரை சோதனை செய்ய ரூ.570/- இருந்தது. பணம் குறித்து கேட்க தனது சொந்த பணம் என்று கூறினார். ஆனால் மேற்படி நபர் தினமும் வட்டார போக்குவரத்து அலுவலகம் வந்தது, வாகனங்களுக்கான பதிவுகள், உரிமம் புதுப்பித்தல், பதிவு செய்தல் ஆகியவற்றிற்கு கையூட்டு தொகை கொடுத்து வருவது விசாரணையில் தெரிய வந்ததால், அவரிடம் இருந்த தொகை வட்டார போக்குவரத்து ஊழியர்களுக்கு கையூட்டு வழங்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த பணம் ரூ.570/- கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் இருந்த முகமது தவ்பிக் என்பவரை விசாரிக்க அடியக்கமங்கலத்தை சேர்ந்த முகம்மது இசாத் என்பவருக்கு 3 பள்ளி வாகனங்கள் இருப்பதாகவும் அந்த வாகனங்கள் GRM, Boys HS School, வேலுடையார் பள்ளிகளுக்கு ஓட்டி வருவதாகவும், அதில் தான் டிரைவராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 12.06.2026-ஆம் தேதி மேற்படி பள்ளி வாகனத்தை (TN50 Y 9766) மற்றொரு ஓட்டுனர் ஓட்டி வந்த போது திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் வாகனத்தை சோதனை செய்து வாகனத்திற்கான ஆவணங்கள் இல்லை என நோட்டீஸ் வழங்கி வாகனத்தை கைப்பற்றி

வைத்திருந்ததாகவும், அதற்கான அபாராத தொகை செலுத்த அலுவலகம் வந்ததாகவும், அப்போது திடீர் சோதனை குழுவினர் வந்து தன்னை சோதனை செய்த போது தன்னிடம் ரூ.50,000/- இருந்ததாக கூறினார். அவரிடம் வாகனத்திற்கான நோட்டீஸ் குறித்து கேட்க நோட்டீஸ் இல்லை என கூறினார். அவரிடம் இருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி தொகை வட்டார போக்குவரத்து ஊழியர்களுக்கு கையூட்டு வழங்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த பணம் ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் இருந்த முகம்மது தாவூது என்பவரை விசாரிக்க திருவாரூரை சேர்ந்த பாலமுருகன் என்பவர் திருவாரூர் பைபாசில் CA Honda நிறுவனம் வைத்துள்ளதாகவும் கடந்த 9 வருடமாக மேற்படி நிறுவனத்தில் செக்ஷன் இன்சார்ஜ் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், தங்கள் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் வாகனங்களுக்கு பதிவு பெறுவது தொடர்பாக தினந்தோறும், திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்து செல்வதாகவும், இன்று 18.06.2026-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு 5 வாகனங்களுக்கு புதிதாக பதிவு எண்கள் பெறுவதற்கு திருவாரூர் RTO அலுவலகம் வந்ததாகவும், அப்போது திடீர் சோதனை குழுவினர் தன்னை சோதனை செய்து ரூ.9,500/- எடுத்ததாகவும, அது குறித்து தன்னிடம் விளக்கம் கேட்க வருகிற ஆகஸ்ட் மாதம் தனக்கு திருமணம் எனவும், அதற்கு முன்பணம் கொடுப்பதற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று தெரிவித்தார். அவரிடம் இருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி தொகை வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கு கையூட்டு வழங்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த பணம் ரூ.9,500/- கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.கஜேந்திரன் என்பவரை விசாரிக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அண்ணன் மெஸ் வைத்துள்ளவரின் கட்டிடத்தில் ஸ்ரீகணேசா புகை சோதனை மையம் வைத்துள்ளதாவும், தனது கடையில் கொரடாச்சேரியை சேர்ந்த கோபிகண்ணன் என்பவர் தனக்கு உதவியாளராக சுமார் 4 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும், தன்னிடம் வரும் வாகனங்களுக்கு புகை சோதனை சான்று வழங்குவேன் என்றும், மேலும் GPS, VLDT கருவி பொருத்தும் பணிகளும் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,220/- இருந்தது. அது குறித்து கேட்க தனது வீட்டில் கொத்தனார் வேலை நடைபெற்று வருவதால் சிமெண்ட் வாங்க வைத்திருந்ததாகவும் கூறினார். மேலும் விசாரணையில் இவர் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் மூலம் நடை பெறும் வாகன பதிவு, உரிமம் பெறுதல்', உரிமம் புதுப்பித்தல்

போன்றவற்றிற்கு குறிப்பிட்ட தொகை வசூல் செய்து தனது கடையில் வைத்துக்கொண்டு அவ்வப்போது வட்டார போக்குவரத்து அலுவலருக்கும், போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கும் கையூட்டு தருவதை வழக்கமாக செய்து வருவது தெரிய வந்ததால் ரூ.2,220/- சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.காளியப்பனிடம் அலுவலகத்திற்கு அருகில் உள்ள கடைகளில் கையூட்டு தொகையினை வசூலித்து வாரத்திற்கு ஒரு முறை பெற்று செல்வது குறித்து விசாரிக்க, அவ்வாறு பெறுவது இல்லை என்று கூறியவர், பின்னர் மகாசக்தி காம்ப்ளக்சில் சாந்தி கணிணி மையம் வைத்து நடத்தி வரும் திரு.சுப்பிரமணியன் மற்றும் ஸ்ரீகணேசா புகை சோதனை மையம் நடத்திவரும் திரு.கஜேந்திரன் ஆகியோர் வாரம் ஒருமுறை ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்து தொகை வசூல் செய்து தனக்கு அளிப்பதற்கு உதவியாக இருப்பதாக கூறினார். எனவே திடீர் சோதனை குழுவினர் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் கஜேந்திரன் ஆகியோருடன் புறப்பட்டு RTO அலுவலகத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் நீச்சல் குளத்திற்கு எதிரிபுறம் உள்ள மகாசக்தி காம்ப்ளக்சில் சாந்தி கணினி மையத்திற்கு 13.30 மணிக்கு சென்று சோதனை குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு சோதனை செய்ய கடையின் உரிமையாளர் திரு.சுப்பிரமணியன் ஆஜரில் இருந்தார். மேலும் 1) செந்தில்குமார், 2) தியாகராஜன், 3) கார்த்திகேயன், 4) துரை, 5) சந்திரசேகரன் தனிநபர்கள் கடையில் ஜெராக்ஸ் எடுப்பதற்காக இருந்தனர். அவர்களையும் சோதனை செய்து அனுப்பப்பட்டது. பின்னர் திரு.சுப்பிரமணியனை சோதனை செய்ய அவரது மேல் சட்டை பாக்கெட்டில் ரூ.850/- இருந்தது. மேற்படி சுப்பிரமணியன் கிழக்கு பக்கம் பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்தார். அவருக்கு முன்புறம் மரத்தினால் ஆன மேல்புறமும், கீழே ஸ்டீலால் ஆன இரண்டு டிராயர்கள் உள்ள மேஜை இருந்தது. மேஜையின் மேல் கணினியும், மேல் டிராயரில் ஜெராக்ஸ் எடுக்க வருபவர்களுக்கு மீதம் கொடுக்க கொஞ்சம் சில்லரை பணமும், ரூ.20,000/-மும் (500*40) இருந்தது. கீழ் டிராயரை சோதனை செய்ய ரப்பர் பேன்ட் சுற்றப்பட்டு 500 ரூ பணக்கட்டு ஒன்று இருந்தது. அதை எண்ணி பார்க்க ரூ.47,000/- (500*94) இருந்தது. அந்த பணக்கட்டுடன் ஒரு வெள்ளை தாள் சுற்றப்பட்டு இருந்தது. அந்த வெள்ளை தாளில் வாகன எண்கள் குறிப்பிடப்பட்டும், அந்த எண்களுக்கு நேராக தொகைகள் குறிப்பிடப்பட்டும் இருந்தது. மேலும் ரப்பர் பேன்ட் சுற்றப்பட்ட மற்றொரு 500 ரூ பணக்கட்டும் இருந்தது. அதனை எண்ணி பார்க்க ரூ.19,000/- (38*500) இருந்தது. அந்த

பணக்கட்டுடன் வாகன எண் குறிப்பிடப்பட்ட ஒரு வெள்ளை தாள் சுற்றப்பட்டு இருந்தது. மேற்கண்ட தொகைகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, சட்டை பையில் வைத்திருந்த ரூ.850/- தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்றும், மேல் டிராயரில் இருந்த ரூ.20,000/- கடந்த 16.06.2026, 17.06.2026 ஆகிய இரண்டு நாட்களில் உரிமம் புதுப்பித்தல், வாகன பெயர் மாற்றம், அனுமதி சீட்டு தொகை ஆகியவற்றிற்கான தொகை மற்றும் சர்வீஸ் தொகை ஆகியவற்றை தான் பணமாக விண்ணப்பதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டு தனது பெயரில் உள்ள சிட்டி யூனியன் வங்கி கணக்கிலிருந்து செலுத்திவிடுவதாகவும், அதற்கான தொகை எனவும் கூறி அதற்கான ஆவணத்தை சமர்ப்பித்தார். எனவே மேற்கண்ட தொகைகள் ரூ.850/- மற்றும் ரூ.20,000/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேஜையின் கீழ்புற டிராயரில் இருந்த ரூ.47,000/- மற்றும் ரூ.19,000/- குறித்து கேட்க அது குறித்து தனக்கு தெரியாது என்று கூறினார். இவர் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் மூலம் நடை பெறும் வாகன பதிவு, உரிமம் பெறுதல், உரிமம் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு குறிப்பிட்ட தொகை வசூல் செய்து தனது கடையில் வைத்துக்கொண்டு அவ்வப்போது வட்டார போக்குவரத்து அலுவலருக்கும், போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கும் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ரூ.47,000/- மற்றும் ரூ.19,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் அலவலக சோதனையில் சுப்பிரமணியனால் வரவு செலவுகள் எழுதப்பட்ட City Union Bank Diary மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் சோதனை குழுவினர் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் கஜேந்திரன் ஆகியோருடன் சாந்தி ஆட்டோ கன்சல்டக்ட் கடையிலிருந்து புறப்பட்டு அங்கிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஸ்ரீகணேசா புகை சோதனை கடைக்கு சுமார் 15.30 மணிக்கு சென்று சோதனை செய்த போது கஜேந்திரன் அமர்ந்திருக்கும் இருக்கையின் முன்புறமுள்ள மேஜை டிராயரில் கட்டுக்கட்டாக தொகைகள் இருந்தன. 1) அப்புனு என்று எழுதப்பட்ட வெள்ளை தாள் சுற்றப்பட்ட ரூ.3,000/- (500*6), 2) வெள்ளை பேப்பரில் ரப்பர் பேன்ட் சுற்றப்பட்டு ரூ.31,600/- (500*62, 200*3), 3) 500 ருபாய் நோட்டின் முன் புறத்தில் TN 03 AJ 2700 என்று பென்சிலால் எழுதப்பட்டு ரப்பர் பேன்ட் சுற்றப்பட்ட ரூ.5,800/- (500*11, 200*1, 100*1), 4) ஒரு வெள்ளை தாளில் ADS 17, Moon 2.1 என எழுதப்பட்டு ரப்பர் பேன்ட் சுற்றப்பட்டு

ரூ.19,100/- (500*37, 200*2, 100*2), 5) ரப்பர் போட்டு சுருட்டி வைக்கபட்ட நிலையில் ரூ.1,100/- (500*1, 100*6), 6) வெள்ளை பேப்பரில் தனியாக சுருட்டி வைக்கப்பட்ட ரூ.4,800/- (500*9, 200*1, 100*1), 7) Paveena என்று எழுதப்பட்ட கருப்பு நிற கைப்பையில் ரூ.7,400/- (500*9, 200*12, 100*5), 8. கிளிப்பில் இருந்த ரூ.4,400/- (200*10, 100*24), 9. புகை பரிசோதனை தொடர்பாக பராமரிக்கப்படும் பச்சை நிற அட்டையுடன் கூடிய நோட்டில் பக்கம் எண் 42-ல் ரூ.10,000/- (500*20) இருந்தது. மேற்கண்ட தொகைகள் குறித்து அவரிடம் விசாரிக்க 17.06.2026-ஆம் தேதி புகை பரிசோதனை செய்வதற்காக கட்ட வேண்டிய கட்டண தொகை மேற்படி வரிசை எண் 8 மற்றும் 9 ல் உள்ள ரூ.4,400/- மற்றும் ரூ.10,000/- எனவும், அதற்குரிய ஆவணத்தையும் ஆஜர் செய்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை ரூ.14,400/- அவரிடமே திருப்தி கொடுக்கப்பட்டது. வ.எண்.1 முதல் 7 வரையிலான தொகைகளுக்கு சரியாக விளக்கம் அளிக்காததால், திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் மூலம் நடை பெறும் வாகன பதிவு, உரிமம் பெறுதல், உரிமம் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு குறிப்பிட்ட தொகை வசூல் செய்து தனது கடையில் வைத்துக்கொண்டு வட்டார போக்குவரத்து அலுவலருக்கும், போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கும் கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கூடுதல் தொகை ரூ.72,800/- மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் கடை சோதனையில் 1) வட்டார போக்குவரத்து அலுவலரால் கையொப்பம் செய்யப்பட்ட நிகழ்வு வாகன ஆய்வு அறிக்கை விண்ணப்பங்கள் - 237, 2) வட்டார போக்குவரத்து அலுவலக முத்திரையுடன் கூடிய வாகன ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள் -7, 3) சரக்கு வாகன அனுமதி சீட்டு அலுவலக குறிப்பு எண். 812, ந.க.எண்.32271/அ2/2025, 4) சரக்கு வாகன அனுமதி சீட்டு அலுவலக குறிப்பு எண். 315, ந.க.எண்.10115/அ-4/2026, 5) சரக்கு வாகன அனுமதி சீட்டு அலுவலக குறிப்பு எண். 268, ந.க.எண்.10144/அ6/2026, 6) வட்டார போக்குவரத்து அலுவலரால் கையொப்பம் செய்யப்பட்ட வாகன பெயர் மாற்ற விண்ணப்பங்கள் -11, 7) RALCO Tyres Diary -2018 மற்றும் அதில் இருந்த தொகை விபர குறிப்புகள் எழுதப்பட்ட தாள்கள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் சுமார் 16.30 மணியளவில் ஸ்ரீகணேசா புகை சோதனை கடையிலிருந்து திடீர் சோதனை குழுவினர், வட்டார போக்குவரத்து அலுவலர், கஜேந்திரன், சுப்பிரமணியன் ஆகியோரோடு வட்டார போக்குவரத்து அலுவலகம் வரப்பட்டது. இன்று 18.06.2026-ஆம் தேதி திருவாரூர்

வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் அது தொடர்புடைய கடைகளில் சோதனை செய்யப்பட்டதில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தனி நபர்களிடமிருந்து ரூ.62,290/- சாந்தி ஆட்டோ கன்சல்டன்ட் கடையில் இருந்து ரூ 66,000/-ம் கஜேந்திரன் புகை பரிசோதனை கடையில் இருந்து ரூ 72,800/- ஆக கூடுதல் தொகை ரூ 2,01,090/- கணக்கில் வராத தொகையானது மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட கணக்கில் வராத தொகை ரூ.2,01,090/- வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்கள் மூலமாக கையூட்டு பெறப்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகில் உள்ள கணினி மற்றும் புகை சான்று வழங்கும் கடைகளில் கொடுக்கப்பட்டு வாரம் ஒருமுறை வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கொடுக்க வைத்திருந்த பணம் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. மேலும் தனிநபர்களை வட்டார போக்குவாத்து அலுவலகத்திற்குள் அனுமதிக்கக்கூடாது என போக்குவரத்து ஆணையரால் வழங்கப்பட்ட R.No.13673/RA1/2021 Dated: 19.07.2021-ன் படி சுற்றறிக்கையில் உள்ள அறிவுரைகளை பின்பற்றாமல் தனிநபர்களை உள்ளே வட்டார போக்குவரத்து அலுவலர் அனுமதித்துள்ளார். மேற்படி திடீர் சோதனை இன்று 18.06.2026-ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை அசல், வாதியின் புகார் மனு ஆகியவற்றை இணைத்து திருவாரூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

18/6/26

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம்-7-ல் கண்ட எதிரிகளின் விபரம்

1. திரு. M.P.காளியப்பன், த/பெ பொன்னுசாமி வட்டார போக்குவரத்து அலுவலர் , வட்டார போக்குவரத்து அலுவலகம் திருவாரூர்.

2. திரு. கஜேந்திரன் த/பெ அமிர்த கணேசன், முதலியார் தெரு, திருவாரூர்.

3. திரு. சுப்பிரமணியன் த/பெ ராமகிருஷ்ணன், அண்ணா நகர், சேந்தமங்கலம்.

4. திரு.சிவாஜி , த/பெ ராஜேந்திரன், மேல கொத்தத்தெரு, மயிலாடுதுறை மெயின்ரோடு, திருவாரூர்.

5. திரு.முகமது தவ்பிக் த/பெ நஜிபுதின், தெற்குதெரு, அடியக்கமங்கலம்.

6. திரு.முகம்மது தாவூத் த/பெ அப்துல் கபூர், தெற்குதெரு, ஆழியூர், நாகப்பட்டினம்.

9/6/26

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.